பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

25 05 2024 7 15

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைக்கு 6வது கட்டமாக இன்று 58 தொகுதிகளில் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

2. பெங்களூரு ராமேஸ்வரம் உணவக குண்டுவெடிப்பு தொடர்பாக மேலும் ஒரு நபரை தேசிய புலனாய்வு முகமை கைது செய்துள்ளது.

3. ரஃபாவில் உடனடியாக ராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

4. வங்கக் கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று புயலாக மாறும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. **Lyon** ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இன்று யூகி பாம்ப்ரி – **Albano** இணை, ஃபின்லாந்து - பிரிட்டன் இணையை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மக்களவைக்கு 6வது கட்டமாக 58 தொகுதிகளில் இன்று காலை வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

ஜார்கண்ட் மாநிலத்தின் 4 மக்களவைத் தொகுதியில் மாலை 5 மணி வரை மட்டுமே வாக்குப்பதிவு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 6ஆம் கட்ட வாக்குப்பதிவில் தலைநகர் தில்லியில் உள்ள 7 மக்களவைத் தொகுதியிலும், உத்தரப்பிரதேசத்தில் 14, மேற்குவங்கம் மற்றும் பீகாரில் தலா 8, ஹரியானாவில் 10, ஒடிசாவில் 6, ஜம்மு-கஷ்மீரில் ஒன்று என 58 தொகுதிகளில் வாக்குப்பதிவுக்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிஜேபி மூத்த தலைவர்கள் திரு. தர்மேந்திர பிரதான், திருமதி மேனகா காந்தி, ஹரியானா முன்னாள் முதலமைச்சர் திரு. மனோகர்லால் கட்டார், பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு. சம்பித் பத்ரா, மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் மகள் பன்சூரி ஸ்வராஜ்...

முன்னாள் கிரிக்கெட் வீரர் திரு. மனோஜ் திவாரி, காங்கிரஸ் மூத்த தலைவர்களான திரு. தீபேந்தர்சிங் ஹூடா, திரு. ராஜ் பாபர், முன்னாள் மத்திய அமைச்சர் குமாரி செல்ஜா, திரு. கண்ணையாகுமார், சமாஜ்வாதி கட்சியின் திரு. தர்மேந்திர யாதவ், மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவர் திருமதி மெஹபூபா முஃப்தி ஆகியோர் இன்று வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் போட்டியிடும் முக்கிய வேட்பாளர்கள் ஆவர்.

இன்றைய வாக்குப்பதிவுக்காக 11 லட்சத்து 4 ஆயிரம் ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

11 கோடியே 13 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக ஒரு லட்சத்து 14 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தலை அமைதியாகவும், நேர்மையாகவும் நடத்தி முடிக்க தேர்தல் ஆணையம் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

இந்நிலையில் மக்களவைக்கு 7வது மற்றும் கடைசி கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 7 மாநிலங்கள், ஒரு யூனியன்பிரதேசத்திற்கு உட்பட்ட 57 தொகுதிகளில் பிரச்சாரம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இந்தத் தொகுதிகளில் வாக்குப்பதிவுக்கு இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில் தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தலைவர்கள் வாக்காளர்களை சந்தித்து தங்களது கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை வாக்குச்சாவடி வாரியாக வெளியட தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனு மீது உத்தரவு பிறப்பிக்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.

நீதிபதி தீபங்கர் தத்தா, நீதிபதி சதீஷ் சந்திர ஷர்மா ஆகியோர் அடங்கிய விடுமுறைக் கால அமர்வு, இந்த மனு மீதான விசாரணையை ஒத்தி வைத்ததோடு, மக்களவைத் தேர்தல் முடிந்த பிறகு விசாரிக்கப்படும் என்று கூறியது.

தேர்தல் அமைதியாகவும், நேர்மையாகவும் நடைபெற வேண்டும் என்று அனைவரும் விரும்புகிறார்கள் என்றும், அதே நேரத்தில் விஷமிகள் எந்த ஆதாயமும் இதனால் பெற்றுவிடக் கூடாது என்பதிலும் கவனமாக இருக்க வேண்டும் என்று அந்த அமர்வு தெரிவித்தது.

<<<<>>>>

ஹரியானாவில் 6வது கட்ட வாக்குப்பதிவு குறித்து சமூக விரோத சக்திகள் சமூக வலைதளங்களில் வதந்தியைப் பரப்புவதால் காவல்துறையினர் கண்காணிப்பு பணியை தீவிரப்படுத்தியுள்ளனர்.

வன்முறையில் ஈடுபடும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்மாநில காவல்துறை தலைமை இயக்குநர் சத்ருஜித் கபூர் எச்சரித்துள்ளார்.

சமூக வலைதளங்களை காவல்துறையினர் தீவிரமாக கண்காணித்து வருவதாகவும், போலியான காணொலிகளை பதிவிட்டு சமூகத்தில் பதற்றத்தை ஏற்படுத்தும் நபர்கள் கண்டுபிடிக்கப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

பொதுமக்கள் யாரும் தவறான காணொலிக் காட்சிகளை பகிர வேண்டாம் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

<<<<>>>>

பெங்களூரு ராமேஸ்வரம் உணவக குண்டுவெடிப்பு தொடர்பாக மேலும் ஒரு நபரை தேசிய புலனாய்வு முகமை கைது செய்துள்ளது.

கர்நாடகாவில் ஹூப்ளி நகரைச் சேர்ந்த சோஹிப் அகமது மிர்ஸா என்ற 35 வயது நபரை நேற்று கைது செய்ததாகவும், இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள 5வது நபர் இவர் என்றும் தேசிய புலனாய்வு முகமை கூறியுள்ளது.

ஏற்கனவே லஷ்கரே தொய்பா தீவிரவாத தாக்குதல் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் சோஹிப் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சிறையில் இருந்து விடுதலை ஆனவுடன் புதிய சதித் திட்டத்தில் இவர் ஈடுபட்டதாக அந்த முகமை கூறியுள்ளது.

இதே வழக்கில் கடந்த மாதம் கொல்கத்தாவில் கைது செய்யப்பட்ட அப்துல் மதீன் தாஹா என்பவரோடு இந்த நபருக்கும் தொடர்பிருந்தது மின் அஞ்சல் வாயிலாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மார்ச் மாதம் நிகழ்ந்த ராமேஸ்வரம் உணவக குண்டுவெடிப்பு வழக்கு தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை இதுவரை 29 இடங்களில் சோதனை நடத்தியுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் நடப்பாண்டில் மட்டும் மூளைச்சாவு அடைந்த 109 பேரின் உடல் உறுப்புகள் தானமாக பெறப்பட்டு 642 நபர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

இதில் முதலிடத்தில் சென்னையில் உள்ள ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை உள்ளது என்று மாநில உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பினர் செயலரான மருத்துவர் என். கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு, உடல் உறுப்பு தானத்திலும், உறுப்புகளை பிறருக்கு பொருத்துவதிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்றார்.

உடல் உறுப்புகளை தானம் செய்பவர்களின் உடலுக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று கடந்த ஆண்டு மாநில அரசு அறிவித்த பின்னர் உடல் உறுப்பு தானம் செய்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

<<<<>>>>

ரஃபாவில் உடனடியாக ராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காஸா திட்டுப் பகுதியில் உள்ள ரஃபாவில் இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தினால் பெருத்த சேதம் ஏற்படும் என்றும், ஏராளமானோர் உயிரிழப்பார்கள் என்றும் பல்வேறு நாடுகள் அஞ்சுகின்றன.

இந்நிலையில் இஸ்ரேல் மேற்கொள்ள உள்ள ராணுவ தாக்குதலை தடுத்து நிறுத்த சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாப்பிரிக்கா முறையிட்டது.

ஏற்கனவே காஸாவில் பெரும் துயரம் ஏற்பட்டுள்ள நிலையில் ரஃபாவிலும், இஸ்ரேல் ராணுவ தாக்குதலை மேற்கொண்டால் நிலைமை மேலும் மோசமாகும் என்று சர்வதேச நீதிமன்ற நீதிபதி நவாஃப் சலாம் கூறினார்

ஆதேநேரத்தில் நீதிமன்ற உத்தரவை நிராகரிப்பதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

சர்வதேச சட்டத்தின்படியே காஸாவில் ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் இஸ்ரேல் பகுதிகள் மீது ஹமாஸ் இயக்கத்தினர் நடத்திய திடீர் தாக்குதலில் ஆயிரத்து 200 பேர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து இஸ்ரேல், பாலஸ்தீனத்தின் காஸா பகுதியில் நடத்திய தாக்குதலில் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

யுக்ரைனின் வடகிழக்கு நகரமான **Kharkiv**-வில் நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் 7 பேர் உயிரிழந்தனர். 21 பேர் காயமடைந்தனர்.

ரஷ்ய துருப்புகள் இந்த ஏவுகணைகளை செலுத்தியதாகவும், உயிரிழந்தவர்களில் பெரும்பாலோர் அச்சு நிறுவனத்தில் பணிபுரிந்தவர்கள் என்றும், **Kharkiv** மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஏவுகணை தாக்குதல் நடந்தபோது அந்த அச்சகத்தில் 50 பேர் பணியாற்றிக்கொண்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

வங்கக் கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று புயலாக மாறும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இது வடக்கு, வடகிழக்கு திசையில் நகர்ந்து தீவிரப் புயலாக வலுப்பெற்று நாளை நள்ளிரவு மேற்குவங்கம் - பங்களாதேஷ் இடையே கரையைக் கடக்கக் கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அடுத்த 3 நாட்களுக்கு குமரிக் கடல் பகுதி, மன்னார் வளைகுடா மற்றும் அதனையொட்டிய தென்தமிழக கடலோரப் பகுதி, மத்திய கிழக்கு மற்றும் அதனை ஒட்டியுள்ள வடக்கு வங்கக் கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் அந்தப் பகுதிகளில் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று மீனவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மேற்குவங்க மாநிலத்தில் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் அம்மாநில அரசு ஈடுபட்டுள்ளது.

வங்கக் கடலை ஒட்டிய கரையோரப் பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தயார்நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மத்திய அமைச்சரவை செயலர் திரு. ராஜீவ் கௌபா நேற்று தில்லியில் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் காணொலி வாயிலாக கலந்துகொண்ட மேற்குவங்க மாநில தலைமைச் செயலர், அம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விளக்கினார்.

வங்கக் கடலில் மீன்பிடிக்க சென்றுள்ள மீனவர்கள் கரை திரும்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே தெற்கு கேரளா மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

**Lyon** ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை, ஃபின்லாந்தின் **Harri Heliovaara** – பிரிட்டனின் **Henry Patten** இணையை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

ஐபிஎல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற 2வது தகுதிப் போட்டியில் அந்த அணி 36 ரன் வித்தியாசத்தல் ராஜஸ்தான் அணியை வென்றது.

முதலில் விளையாடிய ஹைதராபாத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 175 ரன் எடுத்தது.

176 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய ராஜஸ்தான் அணி, 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 136 ரன் மட்டுமே எடுத்தது.

சென்னையில் நாளை நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் ஹைதராபாத் அணி, கொல்கத்தா அணியை எதிர்கொள்ள உள்ளது.

**<<<<The End>>>>**